TAMILTH Coimbatore 1 Regional_02 232153
© 2006-2017 Kasturi & Sons Ltd. - -shanmugam.k@thehindutamil.co.in -

குறிச்சி, குனியமுத்தூரில்

பாதாள சாக்கடை திட்டப்பணியை விரைவில் முடிக்க ஆணையர் உத்தரவு

■ கோவை

கோவை குறிச்சி, குனியமுத்தூர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டம் உள்ளிட்ட திட்டப்பணிகளை விரைவில் முடிக்க மாநகராட்சி ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.

கோவை மாநகராட்சி நிர்வாகத்துடன் கடந்த 2011-ம் ஆண்டு இணைக்கப்பட்ட 11 உள்ளாட்சி அமைப்புகள், 40 வார்டுகளாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட இணைப்புப் பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய் பதிக்கும் திட்டம், குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பணி உள்ளிட்டவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப் பணிகளை, மாநகராட்சி ஆணையர் ஷ்ரவன் குமார் ஜடாவத் நேற்று முன்தினம் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதைத் தொடர்ந்து, மாநகராட்சி தெற்கு மண்டல அலுவலகத்தில் குடிநீர் விநியோகம் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

பின்னர் அதிகாரிகளிடம் கூறும்போது,"குறிச்சி, குனியமுத்தூரில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடை குழாய் பதிக்கும் திட்டப்பணி, குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பணியை குறிப்பிட்ட காலத்துக்குள் விரைவாக முடிக்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் திட்டப்பணியை விரைவாக முடித்தால் தான் நிதி விடுவிக்கப்படும். குழுக்கள் அமைத்து, திட்டப்பணியில் தொய்வு ஏற்படாமல் தொடர்ந்து கண்காணித்து விரைவில் முடிக்க வேண்டும். இப் பகுதிகளில் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் சாலைகளை சீரமைத்து, தார்ச்சாலைகள் அமைக்கும் பணியை விரைவாக முடிக்க வேண்டும். சுகாதாரப் பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள வேண்டும்," என்றார் ஆணையர்.

கூட்டத்தில் மாநகர பொறியாளர் லட்சுமணன், தெற்கு மண்டல உதவி ஆணையர் ரவி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வைப் பொறியாளர் முரளி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வெள்ளியங்கிரி உழவன் உற்பத்தியாளர் அமைப்புக்கு தேசிய விருது

● மத்திய வேளாண் அமைச்சர் வழங்கினார்

■ கோவை

கோவை மாவட்டம் வெள்ளியங்கிரியில் இயங்கும் வெள்ளியங்கிரி உழவன் உற்பத்தியாளர் அமைப்புக்கு, தேசிய அளவிலான விருது வழங்கப்பட்டுள்ளது.

டெல்லியில் நடைபெற்ற வேளாண் மாநாட்டில், 'சிறந்த எஃப்.பி.ஓ' என்ற பிரிவில், தேசிய அளவிலான விருது இந்த அமைப்புக்கு வழங்கப்பட்டது. மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், அமைப்பின் விவசாயப் பிரதிநிதிகளுக்கு விருது வழங்கி கவுரவித்தார்.

▲ டெல்லியில் நடைபெற்ற விழாவில், கோவை வெள்ளியங்கிரி உழவன் உற்பத்தியாளர் அமைப்பு நிர்வாகிகளுக்கு தேசிய அளவிலான விருது வழங்கிய மத்திய வேளாண்மை துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர்.

கடந்த 2013-ம் ஆண்டு கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் பகுதியில் வெள்ளியங்கிரி உழவன் உற்பத்தியாளர் அமைப்பு தொடங்கப்பட்டது. ஈஷா அறக்கட்டளையின் சமூக நலன் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டு அமைப்பின் வழிகாட்டுதலில் இந்த அமைப்பு செயல்படுகிறது. இந்த அமைப்பில்1,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள்உறுப்பினர்களாக உள்ளனர். அதில் 70 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் சிறு மற்றும் குறு விவசாயிகள் என்பதும், 38 சதவீதம்பேர் பெண் விவசாயிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் தேங்காய், பாக்கு, மஞ்சள், காய்கறி, வாழை போன்றவற்றை உற்பத்தி செய்து, நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இதனால், தொண்டாமுத்தூர் பகுதி விவசாயிகளின் பொருளாதாரமும், வாழ்வாதாரமும் மேம்பட்டுள்ளது. 2018-19-ம் நிதி ஆண்டில் வெள்ளியங்கிரி உழவர் அமைப்பு ரூ.12 கோடி வருமானம் ஈட்டி சாதனை படைத்துள்ளது.

வேளாண் துறையின் வளர்ச்சிக்கு பங்காற்றும் விவசாயிகள், அமைப்புகள், விஞ்ஞானிகள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு ஆண்டுதோறும் மத்திய அரசு சார்பில் விருது வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டு விருதுக்கான தேர்வுக் குழுவில் மத்திய வேளாண் மற்றும் பண்ணை நல மேம்பாட்டு அமைச்சக செயலர் சஞ்சய் அகர்வால், தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழக மேலாண் இயக்குநர் சந்தீப் குமார் நாயக், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் துணை இயக்குநர் ஏ.கே.சிங் மற்றும் வல்லுநர்கள் இடம்பெற்றிருந்தனர்.

நகரில் நடப்பவை

- எஸ்.என்.ஆர் அண்டு சன்ஸ் அறக்கட்டளை: நிறுவனர் தின விழா, எஸ்.என்.ஆர். கலையரங்கம், ஸ்ரீராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி சாலை, மாலை 5.00.
- ஜேசிடி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி: தேசிய அளவிலான தொழில்நுட்பக் கருத்தரங்கம், பிச்சனூர், காலை 10.00.
- டாக்டர் ஜி.ஆர்.தாமோதரன் அறிவியல் கல்லூரி: தொழில் நுட்பப் போட்டிகள், அவிநாசி சாலை, காலை 10.00.
- ஸ்ரீநேரு மகா வித்யாலயா கலை, அறிவியல் கல்லூரி: கலை விழா, மலுமிச்சம்பட்டி, காலை 10.00.
- கற்பகம் உயர்கல்வி நிறுவனம்: தொழில்முனைவோர் விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் கண்காட்சி, ஈச்சனாரி, காலை 10.30.
- கோவை மேலாண்மை சங்கம்: தேசிய மேலாண்மை தினக் கொண்டாட்டம், ஹோட்டல் ரெசிடென்சி டவர்ஸ், அவிநாசி சாலை, மாலை 6.15.
- டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி: தேசிய அளவிலான கருத்தரங்கம், காளப்பட்டி சாலை, காலை 9.30.
- கஸ்தூரி சீனிவாசன் அறநிலையம்: ஓவியக் கண்காட்சி, கஸ்தூரி சீனிவாசன் கலை மையம், அவிநாசி சாலை, காலை 10.00.
- கௌமார மடாலயம்: சதுர்த்தி மற்றும் தட்சிணாமூர்த்தி சிறப்பு வழிபாடுகள், சின்னவேடம்பட்டி, காலை 10.00.
- தேசிய புத்தக அறக்கட்டளை, நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்: 35–வது தேசிய புத்தகத் திருவிழா, புத்தகக் காட்சி, மத்தியப் பேருந்து நிலையம் எதிரில், ஹோட்டல் தமிழ்நாடு அருகில், காந்திபுரம், காலை 10.00.
- ஸ்ரீகோனியம்மன் கோயில்: தேர்த் திருவிழா, கிளி வாகனத்தில் அம்மன் திருவீதி உலா, பெரியகடைவீதி, காலை 10.00.

கிணத்துக்கடவு

- கோவை பெந்தெகொஸ்தே சபை: வருடாந்திர சென்டர் கன்வென்ஷன் மற்றும் சிறப்பு ஆராதனை, கன்வென்ஷன் வளாகம், பொள்ளாச்சி பிரதான சாலை, கிட்ஸ் பார்க் பள்ளி பின்புறம், கிணத்துக்கடவு, மாலை 6.00.

இப்பகுதியில் உங்கள் நிகழ்வுகளும் இடம்பெற
இந்து தமிழ் திசை செய்திப் பிரிவு, 19&20,ஏ.டி.டி.காலனி, எல்ஐசி ரோடு, கோவை–641018.
மின்னஞ்சல் முகவரி: repkovai@hindutamil.co.in

நீலகிரி மாவட்டத்தில்

14 கிலோ பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல்

■ உதகை

நீலகிரி மாவட்டத்தில் நடத்தப்பட்ட களஆய்வில் 14 கிலோ பிளாஸ்டிக் பொருட்கள் கைப்பற்றப்பட்டு ரூ. 56,000 அபராதம் வசூலிக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டம், உதகை, குன்னூர், கூடலூர், நெல்லியாளம் ஆகிய நகராட்சிகள், 11 பேரூராட்சிகள், 4 ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கியுள்ள 4 மண்டலங்களில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டைக் குறைப்பது, பொதுஇடங்களில் குப்பை கொட்டுவதை தவிர்ப்பது குறித்து ஒட்டுமொத்த களஆய்வு நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. இதில், சுமார் 14 கிலோ எடையிலான பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அதைப் பயன்படுத்தியவர்கள் மற்றும் விற்பனை செய்தவர்களிடம் இருந்து ரூ.56,200 அபராதம் வசூலிக்கப்பட்டது.

▲ கோவையில் புற்றுநோயாளிகளுக்கு உதவும் வகையில் தலைமுடியை நன்கொடையாக வழங்கிய தனியார் கல்லூரி மாணவிகள், பேராசிரியைகள்.

தங்கம் பவுனுக்கு ரூ.96 குறைவு

■ சென்னை

சென்னையில் தங்கம் விலை பவுனுக்கு நேற்று ரூ.96 குறைந்து ரூ.32 ஆயிரத்து 640-க்கு விற்பனை செய்யப்பட்டது.

சர்வதேச அளவில் பல்வேறு நாடுகளில் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டுள்ளதால், பெரும்பாலான முதலீட்டாளர்கள் தங்கத்தில் தொடர்ந்து முதலீடு செய்து வருகின்றனர். இதனால், தங்கம் விலை எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்து வருகிறது. இருப்பினும், சர்வதேச அளவில் தங்கம் விலை கடந்த சில நாட்களாக தங்கத்தின் விலை குறைந்து வருவதால் உள்ளூரிலும் தங்கம் விலை குறைந்து வருகிறது. சென்னையில் தங்கம் விலை பவுனுக்கு நேற்று ரூ.96 குறைந்து ரூ.32 ஆயிரத்து 640-க்கு விற்பனை செய்யப்பட்டது. 22 கேரட் கொண்ட ஒரு கிராம் தங்கம் ரூ.4 ஆயிரத்து 080க்கு விற்பனை ஆனது. இதுவே, நேற்று முன்தினம் ரூ.4 ஆயிரத்து 92-க்கு விற்கப்பட்டது.

வருந்துகிறோம்!
இரங்கல்
இறப்பு
கண்ணீர் அஞ்சலி
68 years
திருசெங்காட்டங்குடி
திருமதி கோதை சத்தியமூர்த்தி
26.02.2020 அன்று ஆச்சாய்யன் திருவடி அடைந்தார்
தங்கள் அன்புடன்
குடும்பத்தார்: சத்தியமூர்த்தி ஸ்ரீராம் & அஸ்வினி, சுபா & ரகுநாதன்
கை பேசி: 89395 98375

இந்து தமிழ் திசை
பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.
படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

வரி விளம்பரங்கள்
தொழில்
டீலர்கள் தேவை
SONA BELT 3X3 தினம் ரூ.7,500; XXX BELT 3X3 தினம் ரூ.7,500 டெலிவரி ஏஜெண்ட். Ct: 8940589268
பொது
சுற்றுலா
6 நாள் ஷீரடி-மார்ச் 8, 22, 29 பண்டரிபுரம், மந்திராலயம் ஏப். 5,12, 19, 26, மே 3, 10, 17, 24, 31
8 நாள் காசி,கயா-மார்ச் 16,30 அலகாபாத்,- ஏப்.6,13,20,27, மே 4,11,18,25
11 நாள் காசி, கயா-மார்ச் 20 டெல்லி, ஆக்ரா, அவுரா - ஏப். 17, மே 1, 11, 22
16 நாள் காசி,அயோத்தி-ஏப். 24
16 நாள் நேபாள், முக்திநாத், காசி ஏப். 19, மே 3,10,17,24, ஜுன் 14
14 நாள் நவஜோதிலிங்கம்-ஏப்.12
15 நாள் பஞ்சதுவாரகா-மார்ச் 10
7 நாள் கேரளா படகு வீடு - மே 18
11 நாள் கேங்டாக், டார்ஜிலிங் ஏப். 8, 15, 22, 29, மே 6, 13, 20, 27
14 நாள் சிம்லா, குளுமணாலி
14 நாள் காஷ்மீர்-மே 5, 14, 23
16 பத்ரிநாத், கேதார்நாத் கங்கோத்ரி, யமுனோத்ரி மே 3, 12, 18, 27, ஜுன் 2, 11
9 நாள் இலங்கை 4 நாள் கோவா
SRINIVASA TOUR, Kovai
9384854566

பொது
சுற்றுலா
IRCTC
பாரத் தர்ஷன்
ராமாயண யாத்திரை
நாசிக் - ஹம்பி - சித்ரகூடம் - பக்சார் - வாரணாசி - ரகுநாதபுரம் - சீதாமார்ஹி - ஜனக்புரி (நேபாளம்) - அயோத்தி - நந்திகிராமம் - அலகாபாத் - சிருங்காவேர்புர்
05.03.20 (14 நாட்கள்) Rs.15,990/-
இரயில் பயணம், போக்குவரத்து, உணவு, ஹாலில் தங்கும் வசதி, GST உட்பட
90031 40680
90031 40655 / 714

விற்பனை
CCTV Camera
எங்கிருந்தும் உங்கள் வீடு/ அலுவலகத்தை மொபைலில் பார்க்கலாம்
EASYTECH
AN ISO 9001-2008 COMPANY
ஈஸிடெக் சொலிசன்ஸ்
இலவச டெமோவிற்கு அழைக்கவும்
கோயம்புத்தூர் 7448888902
திருப்பூர் 7448888903
www.easytechindia.co.in

▲ குடியுரிமை சட்டத்துக்கு எதிராகவும், டெல்லி வன்முறையைத் தடுக்கத் தவறிய மத்திய அரசு மற்றும் பாஜக, ஆர்எஸ்எஸ் அமைப்பைக் கண்டித்தும் கோவை ரயில் நிலையத்தை நேற்று முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்திய தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தினர். படம்: ஜெ.மனோகரன்

வேளாண் பல்கலைக்கழகத்தில் அங்கக வேளாண்மை கருத்துகேட்பு

■ கோவை

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக கலையரங்கில், அங்கக வேளாண்மை குறித்த கருத்துகேட்புக் கூட்டம் நடைபெற்றது.

துணைவேந்தர் என்.குமார் தலைமை வகித்துபேசும்போது, 'இயற்கை விவசாயம், அங்கக விவசாயம், செலவில்லா இயற்கை விவசாயம் குறித்துஆய்வு செய்ய வேண்டியது அவசியம்.

அங்ககப் பொருட்களின் தரம் மற்றும் பண்புகளை அறிவதில் தனி கவனம் செலுத்த வேண்டும். வேளாண்மை பல்கலைக்கழக வளங்குன்றா அங்கக வேளாண்மை துறையில்உள்ள மேம்பட்ட கருவிகள்கொண்ட ஆய்வகத்தை ஆய்வுக்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்' என்றார். பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் கே.எஸ்.சுப்பிரமணியன், தோட்டக்கலை டீன் எம்.புகழேந்தி, வேளாண்மை இணை இயக்குநர் சித்ரா தேவி, பயிர் மேலாண்மை இயக்குநர் வெ.கீதாலட்சுமி ஆகியோரும் பேசினர்.

வியர்க்குதே

கோவை மாவட்டம் கணியூர் துணை மின் நிலையத்தில் பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளதால் கீழ்க்கண்ட பகுதிகளில் நாளை (பிப். 28) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின் விநியோகம் இருக்காது என்று மின் வாரிய செயற் பொறியாளர் எம்.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

மின்தடை பகுதிகள்

ராசிபாளையம், அருகம்பாளையம், கனியூர், ஷீபா நகர், கொள்ளுப்பாளையம், சுப்பராயம்பாளையம், தென்னம் பாளையம் (ஒரு பகுதி), ஊத்துப்பாளையம்.

FORM A
Public Announcement
(Under Regulation 6 of the Insolvency and Bankruptcy Board of India (Insolvency Resolution Process for Corporate Persons) Regulations, 2016)
FOR THE ATTENTION OF THE CREDITORS OF KAMACHI INDUSTRIES LIMITED

	Relevant Particulars	
1	Name of Corporate Debtor	KAMACHI INDUSTRIES LIMITED (Formerly Kamachi Sponge & Power Corporate Ltd.)
2	Date of incorporation of Corporate Debtor	08/10/2003
3	Authority under which Corporate Debtor is incorporated / registered	Registrar of Companies - Chennai
4	Corporate Identity No. / Limited Liability Identification No. of corporate debtor	U27106TN2003PLC051727
5	Address of the registered office and principal office (if any) of corporate debtor	ABC Trade Centre, Old No.50, (New No. 39), 3rdFloor, Anna Salai,Chennai, Tamil Nadu-600002.
6	Insolvency commencement date in respect of corporate debtor	NCLT order dated 19/02/2020 (Published on NCLT Website on 25/02/2020)
7	Estimated date of closure of insolvency resolution process	17/08/2020
8	Name and registration number of the insolvency professional acting as interim resolution professional	Mr. Vikas Prakash Gupta IP No. IBBI/IPA-001/IP-P00501/2017-18/10889
9	Address and e-mail of the interim resolution professional, as registered with the Board	Address:C/o. Dipti Enterprises,55, Nehru Putla, Itwari, Nagpur, Maharashtra-440002. Email : vikas.gupta@bngca.com
10	Address and e-mail to be used for correspondence with the interim resolution professional	Address : New No.37/4,Vasantham II, Main Road, Alwarthiru Nagar Annexe, Chennai, Tamil Nadu-600087. Email : ip.kamachi@gmail.com
11	Last date for submission of claims	10/03/2020
12	Classes of creditors, if any, under clause (b) of sub-section (6A) of section 21, ascertained by the interim resolution professional	Not Applicable
13	Names of Insolvency Professionals identified to act as Authorised Representative of creditors in a class (Three names for each class)	Not Applicable
14	(a) Relevant Forms and (b) Details of authorized representatives are available at :	(a) Relevant Forms available at https : //ibbi.gov.in/home/downloads (b) Not Applicable

Notice is hereby given that the National Company Law Tribunal, Chennai Bench has ordered the commencement of a corporate insolvency resolution process of Kamachi Industries Limited vide NCLT order dated 19/02/2020 published on 25/02/2020.
The creditors of Kamachi Industries Limited are hereby called upon to submit their claims with proof on or before 10/03/2020 to the interim resolution professional at the address mentioned against entry No. 10.
The financial creditors shall submit their claims with proof by electronic means only. All other creditors may submit the claims with proof in person, by post or by electronic means.
Submission of false or misleading proofs of claim shall attract penalties.
Sd/-
Vikas Prakash Gupta
Interim Resolution Professional
IBBI/IPA-001/IP-P00501/2017-18/10889
Date : February 27, 2020
Place : Mumbai

தமிழ்நாடு அரசு / பொதுப்பணித்துறை
பொதுப்பணித்துறை / கட்டட அமைப்பு இன விலை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு / ஒப்பந்த முறை : சி படிவம் – இன விலை முறை
குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். 17 / 2019–20 / கட்டட (க & ப) வட்டம் / திருச்சி / நாள் : 24.2.2020
தமிழ்நாடு ஆளுநருக்காகவும் மற்றும் அவரது சார்பாக கண்காணிப்புப்பொறியாளர், பொ.ப.து, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருச்சி அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ததுதி மற்றும் அனுபவம் வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்க்காணும் பணிகளுக்கு குறிப்பிட்ட தேதியில் பிற்பகல் 3.00 மணி வரை வரவேற்கப்படுகிறது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினமே பிற்பகல் 3.30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களுடைய முகவர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.
வேலையின் பெயர் : தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டிடத்திற்கு உள் மற்றும் வெளிப்பூசும் மின் வசதிகள் ஏற்படுத்தும் பணி. பணியின் தோராய மதிப்பு (ரூபாய் இலட்சங்களில் சரக்கு மற்றும் சேவை வரி 12% உட்பட) : 74.90 முன் வைப்புத் தொகை (ரூபாய்) : 47,500/– ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் : 06.03.2020 ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கிடைக்க பெறும் காலம் : 27.02.2020 முதல் 05.03.2020 பிற்பகல் 5.45 மணி வரை. ஒப்பந்தக் காலம் : 5 மாதங்கள்.
குறிப்பு: (1) ததுதி விவரம் உள்ளிட்ட பிற அனைத்து விவரங்களும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை கீழ்க்கண்ட இணையதளத்தில் இலவசமாக தரவிறக்கம்கொள்ளலாம் www.tenders.tn.gov.in. & www.tn.tenders.gov.in 2) மேலும் கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து. கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம் திருச்சி அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு Rs.15,000/- + GST Rs.1800/- தொகையை செலுத்தியும் நேரில் பெற்றுக்கொள்ளலாம். (3) முன் வைப்புத்தொகை வரவு வைக்கப்பட வேண்டிய அலுவலர்: மின்பொறியாளர், பொ.ப.து., மின் கோட்டம், திருச்சி-20. (4) ஒப்பந்தக்காரர்கள் குறைந்தபட்ச ததுதி : பொதுப்பணித்துறையில் வகுப்பு II-ல் ரூ.75.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் மதிப்பில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள். (5) ஒப்பந்தக்காரர் ததுதி குறித்த விபரம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விவர குறிப்புகளின் மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். (6) ஒப்பந்தப்புள்ளி அட்டவணை பெறவும் அல்லது உறையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அளிக்கவும் நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாள், ஏதாவது ஒரு காரணத்தினால் அரசு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், ஒப்பந்தப்புள்ளி அட்டவணை அதற்கு அந்த அலுவலக வேலை நாளில் அளிக்கப்படும். அதேபோல் உறையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளியையும் அடுத்த நாள் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். (7) இப்பணிக்கான முன் ததுதி விண்ணப்பம் குறித்து ஏதேனும் விளக்கம் தேவைப்படின் அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட(க&ப)வட்டம், கன்டோன்மெண்ட், திருச்சி-1 அலுவலக தொலைபேசி எண்: 04312462604.
செ.மெ.தொ/ 1101 /ஒப்பந்தப்புள்ளி/2020
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட (க &ப) வட்டம், திருச்சி – 1

பேங்க் ஆஃப் பரோடா Bank of Baroda
மண்டல ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் மீட்பு கிளை: 1-வது தளம், எண்.74, தியாகராய ரோடு, தி நகர், சென்னை-600017, Ph : 2815 2104
E-ஏல விற்பனை அறிவிப்பு
கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (விதி 8 (6) சேர்த்து வாசிக்கவும்) பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8 (6)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.
இதன் மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிப்பதாவது கடன் கொடுத்த வங்கியிடம் கீழே குறிப்பிட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் ஆக்கப்பூர்வமான சுவாதினத்தில் எடுத்துக் கொண்டுள்ளதை அடுத்து கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் பேங்க் ஆப் பரோடா வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சுவாதீனம் செய்யப்பட்ட சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" எனும் அடிப்படையில் 16.03.2020 அன்று விற்கப்படும்.
வ.எண்.1 கடன்தாரர்கள்: 1. M/s துளசி காட்டன் மில்ஸ் எண்.1334, தாடகம் சாலை, R.S.புரம், கோயம்புத்தூர் - 641 002. 2. திரு. ராஜேஷ் குமார், கதவு எண்.148/149, நாராயணகுருசாமி சாலை, சாய்பாபா காலனி, கோயம்புத்தூர் - 641 011. 3. திருமதி. கைலாஷ் பென்.R.மோடி, கதவு எண்.148/149, நாராயணகுருசாமி சாலை, சாய்பாபா காலனி, கோயம்புத்தூர் - 641 011. 4. திருமதி. கைலாஷ் பென்.R.மோடி, கதவு எண்.102, ஸ்ரீ வஸ்தவா தர்ஷன், 24, பாரதி பார்க் சாலை, 2வது குறுக்கு, சாய்பாபா காலனி, கோயம்பத்தூர் - 641 011.
NPA தேதி: 13.11.2015 | கேட்பு அறிவிப்பு தேதி: 01.12.2015 | அடையாளம் சுவாதினம் எடுத்த தேதி : 11.02.2016
நிலுவை தொகை: 28.02.2020 அன்று வரை ரூ.5,27,30,779/- மற்றும் பிற செலவுகள் சேர்த்து.
சொத்தின் விவரங்கள்: திருமதி. கைலாஷ் பென்.R. மோடி மற்றும் திரு. ராஜேஷ்குமார். B மோடி அவர்களின் பெயரில் உள்ள கோயம்புத்தூர் இணை -II துணை பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட தெலுங்குபாளையம் கிராமத்தில் கதவு எண்.1334-1,2,3,4, டவுன் சர்வே எண் 13/62, கிரவுண்டு சர்வே எண்.71ன்படி 2440 சதுர அடி (5.50 சென்ட் மற்றும் 40 சதுர அடி) நிலம் மற்றும் கட்டிடம். எல்லைகள் : வடக்கில் : 10 அடி கிழக்கு மேற்காக உள்ள நடைபாதை, தெற்கில் : B.K. ராஜசேகரன், விக்டர் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோர்களுக்கு சொந்தமான சொத்து, கிழக்கில் : தடகம் சாலை, மேற்கில் : திருமதி. சுஜாதா புகவல் அவர்களுக்கு சொந்தமான சொத்து.
குறைந்தபட்ச கேட்பு விலை: ரூ.2,34,00,000/- முன்வைப்பு தொகை : ரூ.23,40,000/- ஏல கூட்டு தொகை : ரூ.1,00,000/-
வ.எண்.2: கடன்தாரர்கள்: 1. M/s. மார்ஷல் மரைன் புராடெக்ட்ஸ், உரிமையாளர், திரு.A.விக்ரம் சுதாகர், கதவு எண்.1, பழைய எண்.20, சோழன் தெரு, ஈரோடு டவுன், ஈரோடு-638004. 2. திரு.A.விக்ரம் சுதாகர், கதவு எண்.1, பழைய எண்.20, சோழன் தெரு, ஈரோடு -638004.
NPA தேதி: 29.08.2017 | கேட்பு அறிவிப்பு தேதி: 07.10.2017 | அடையாளம் சுவாதினம் எடுத்த தேதி : 12.12.2017
நிலுவை தொகை: 28.02.2020 அன்று வரை ரூ. 2,44,52,286/- மற்றும் பிற செலவுகள் சேர்த்து.
சொத்தின் விவரங்கள்: ஈரோடு பதிவு மாவட்டம், ஈரோடு துணைப்பதிவு மாவட்டம், ஈரோடு தாலுகா, வெளிபுற ஈரோடு நகராட்சி எல்லைக்குட்பட்ட (வீரப்பன்சத்திரம், ஈரோடு கிராமம்) பழைய GS எண்.86/B, மறுசர்வே எண்.78/4,5, பழைய வார்டு எண்.1, புது வார்டு எண்.9, சோழன் தெரு, என்ற முகவரியில் உள்ள 1260 சதுர அடி நிலம். எல்லைகள்: வடக்கில்: கிழக்கு மேற்காக உள்ள பவானி பிரதான சாலைக்கு செல்லும் சோழன் தெரு, தெற்கில்: வேர் ஹவுஸ் கிடங்கு, மேற்கில்: திரு.V.N.அய்யாதுரை அவர்களின் சொத்து மற்றும் கிழக்கில்: திரு.சிவசுப்ரமணியன் மற்றும் பிறர்களின் சுவாதீன சொத்து.
குறைந்தபட்ச கேட்பு விலை: ரூ.24,42,000/- முன்வைப்பு தொகை : ரூ.2,44,200/- ஏல கூட்டு தொகை : ரூ.1,00,000/-
வ.எண்.3: கடன்தாரர்கள்: 1. M/s. சாசசுவரி ஆர்ட்ஸ், ஷெட் எண்.178/179, சிட்கோ, முதலிபாளையம், திருப்பூர் - 641606. 2. திரு.P. ரவிச்சந்திரன், 3/16, சக்தி நகர், மண்ணாரி அஞ்சல், திருப்பூர் - 641 607. திருமதி. R. ராணி, 3/16, சக்தி நகர், மண்ணாரி அஞ்சல், திருப்பூர் 641 607. 4. திரு. C. பெரியசாமி, 3/16, சக்தி நகர், மண்ணாரி அஞ்சல், திருப்பூர். திருமதி. R. ராணி, 3/16, சக்தி நகர், மண்ணாரி அஞ்சல், திருப்பூர் 641 607.
NPA தேதி: 30.06.2013 | கேட்பு அறிவிப்பு தேத